JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 13.02.2026.

**M.C. 3/2019** **Name**: ரேவதி **W/o**. கோபி **P.W**. 1

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc maths படித்துள்ளேன். திருமணத்தின் போது 25 பவுன் நகையும் 3 லட்சம் சீர்வரிசை பொருள்கள் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராயல் என்ஃபீல்டு வண்டி புது வண்டியாக வாங்கி கொடுக்கவில்லை என்றால் சரிதான். ராயல் என்ஃபீல்டு வண்டியை எதிர்மனுதாரர் தான் வாங்கினார் என்றால் சரியல்ல நாங்கள்தான் பணம் கொடுத்தோம். ஆரம்பத்தில் எங்களுடைய மகள் டைமண்ட் ஆல் நர்சரி பள்ளியில் படித்து வந்தார் என்றால் சரிதான். தற்போது எங்களுடைய மகள் உலகபுரம் கிரீன் கார்டன் பள்ளியில் ஏழாம் வகுப்பு படித்து வருகிறார். இதற்கு முன்பாக திருப்பூரில் உள்ள விகாஸ் வித்யாலயா பள்ளியில் 6 ம் வகுப்பு மட்டும் படித்து வந்தார் என்றால் சரிதான்.

2. என்னுடைய கணவர் குடித்துவிட்டு வந்து அடிப்பார் என்று மனுவிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. லாரி வாங்குவதற்காக 5 லட்சம் பணம் கேட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சகோதரியின் தூண்டுதலின் பேரில் என்னை கொடுமைப்படுத்தினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மற்றொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் அந்த பெண்ணைப் பற்றி மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வேறு எந்த பெண்ணுடனும் தொடர்பு இல்லை மனுவிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. சென்னிமலை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் அதன் பெயரில்

எதிர்மனுதாரர் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் கவுன்சிலிங் கொடுக்கப்பட்டது. குடும்பத் தகராறு என்பதால் இருவருக்கும் புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

3. காவல் நிலைய பிரச்சனைகள் 2013 ஆம் ஆண்டு நடந்தது என்றால் சரிதான். 29.10.2017 ம் தேதி என்னுடைய கணவர் எனக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். குடும்பத்தை நடத்த முன்வர வேண்டும் என்று எதிர்மனுதாரர் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள டிஸ்சார்ஜ் சம்மரியில் என் குழந்தைக்கு சாதாரண காய்ச்சல் ஏற்பட்டதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்கள் என்றால் சரியல்ல நிமோனியா காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றார் . என் மகளுக்கு தொடர் சிகிச்சை எடுக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றால் சரிதான். நான் மனுவிற்காக மருத்துவ சிகிச்சை பெற்று அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு சிகிச்சை பார்த்த மருத்துவர் ஈரோட்டில் உள்ள CK Hospital மருத்துவர் சரஸ்வதி என்றால் சரிதான். அவர் பெண்களுக்கான சிறப்பு மருத்துவர் என்றால் சரிதான் நான் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அது தொலைந்து போய்விட்டது. சாதாரணமாக மருத்துவரை நான் பார்த்ததை தொடர் சிகிச்சை எடுப்பதாக மனுவிற்காக மிகைப்படுத்தி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.சென்னிமலையில் சிந்தாமணி என்ற பேக்கரி உள்ளது என்றால் சரிதான். அது என் அப்பாவுடையது. நான் அவருக்கு உதவியாக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். பேக்கரி கடைகளுக்கு உண்டான கேக், பிஸ்கட், பன் வகைள் மற்ற பேக்கரிகளுக்கு சப்பளை செய்கிறார் என்றால் சரிதான்.

5. பேக்கரியை நான் தான் பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல என் அப்பா அம்மா தான் பார்த்து வருகிறார்கள். பேக்கரி மூலம் எனக்கு போதுமான வருமானம் உள்ளது என்றால் சரியல்ல. முதுநிலை பட்டப்படிப்பு படித்திருந்தும் எனக்கு போதுமான வருமானம் இருந்ததால் தான் எந்த வேலைக்கும் செல்லாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை திருமணம் செய்து கொள்ளும்போது ஓட்டுநராக இருந்து வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தொடர்ச்சியாக வேலைக்கு செல்ல முடியாத நிலையில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. குழந்தையை பார்ப்பதற்கு எதிர் மனுதாரர் வந்து பார்த்தபோது நான் விடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

6. எதிர்மனுதாரர் வருவதில்லை. குழந்தையை எதிர்மனுதாரிடம் காட்டுவதற்கு நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தன் குழந்தைகளுக்கு செய்ய வேண்டியதை செய்ய தயாராக உள்ளார் நான் தான் குழந்தையிடம் எதிர்மனுதாரர் பற்றி தவறாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தை முன்பு எதிர்மனுதாரர் அடித்ததை பார்த்ததால் தான் குழந்தை எதிர்மனுதாரருடன் பேசவில்லை. குழந்தை ஆறாம் வகுப்பு படிக்கும் போது திருப்பூரில் நான் குடியிருந்தேன் என்றால் சரிதான்.

7. எனக்கு வேறொருவருடன் தொடர்பு இருப்பதால் எதிர்மனுதாரரை நான் புறக்கணித்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பியும் நான் தான் புறக்கணித்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு வாடகைக்கு விடும் அளவிற்கு வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பேக்கரி மூலம் போதுமான வருவாய் இருப்பதால் எனக்கும், குழந்தைக்கும் பராமரிப்பு தொகை கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு அவரை பராமரித்துக் கொள்ளும்

**அளவிற்கு வசதி இல்லாததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை